**சுருக்கம்**

பணியமைப்பு – சென்னை மாநகராட்சி நீங்கலாக மற்ற அனைத்து மாநகராட்சியில் பணி புரியும் ஓட்டுநர்களுக்கு தேர்வு நிலை/சிறப்பு நிலை ஊதியம் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.4) துறை

**அரசாணை (ப) எண்.226** நாள் : **22.06.2011**

ஆனி 7, திருவள்ளுவராண்டு 2042

**படிக்கப்பட்டது.**

1) அரசாணை (நிலை) எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள் 26.09.1996.
2) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அவர்கள் கடிதம் எண். 59511/நத2/05 நாள் 19.07.2006
3) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். அ1/8462/2007 நாள் 16.10.2007
4) திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் கடித எண்.சி2/10394/ 2006 நாள் 06.03.2008.
5) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் எண். 14901/2008/மாநஅ1 நாள் 6.6.2009

– – – –

ஆணை :

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது சார்நிலைப் பணிகள், 1996-ன் கீழ் உள்ள ஓட்டுநர் மற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களுக்கான சாதாரண நிலை மற்றும் தேர்வு நிலை ஊதிய விகிதம் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி முறையே ரூ.3200-85-4900 மற்றும் ரூ.4000-100-6000 என்றுள்ள நிலையிலும் மற்றும் மேற்படி பணிவிதியின்படி ஓட்டுநர் பணியிடத்தில் இருந்து இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணிக்கு ((Junior Assistant cum Typist) பதவி உயர்வு மூலம் பணி நிரப்பப்படலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும், ஓட்டுநர் பதவிக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதிய விகிதம் அளிக்கையில், அரசாணை (நிலை) எண்.215, நிதித் துறை, நாள் 22.3.93–ன்படி இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியின் சாதாரண நிலை ஊதிய விகிதமான ரூ.3200-85-4900யிலும், மற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவியின் பதவி உயர்வுப் பணியான உதவியாளர் பணியின் ஊதிய விகிதமான ரூ.4000-100-6000-யிலும் நிர்ணயம் செய்யப்படலாம் எனக் கருதப்படுகிறது எனவும் தெரிவித்து, இது குறித்து தெளிவுரை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2) பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர், அரசுத் துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு சாதாரண நிலையில் ரூ.3200-85-4900ம், தேர்வு நிலையில் ரூ.4000-100-6000 எனவும், சிறப்பு நிலையில் ரூ.4300-100-6000ம் வழங்கப்படுகின்றன என்றும், ஆனால் மாநகராட்சியில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்க இயலாது என தணிக்கைத் துறை தெரிவித்து, மேற்படி ஊதிய விகிதங்களை வழங்குவதற்கு மாநகராட்சி பணி விதிகளில் உரிய திருத்தங்கள் செய்த பின்னரே வழங்க இயலும் என்றும், இது தொடர்பாக அரசின் தெளிவுரை அல்லது அரசாணை பெற்ற பின்னர் தான் தடை நீக்கம் செய்ய இயலும் என தெரிவித்துள்ளதால், மேற்படி ஊதிய நிர்ணயம் குறித்து உரிய தெளிவுரை வழங்குமாறு திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் கோரியுள்ளதாகவும் தெரிவித்து, நகராட்சி நிர்வாக துறையிலும், அரசு துறையிலும் பணியாற்றும் ஓட்டுநர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் ரூ..4000-100-6000 எனவும், சிறப்பு நிலை ஊதியம் ரூ.4300-100-6000 எனவும் வழங்கப்பட்டு வருவதால், இதுவரை மாநகராட்சிகளில் பணிபுரியும் ஓட்டுநர்கள் எவருக்கும் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் ஏதும் வழங்கப்படாததால், அனைத்து மாநகராட்சி ஓட்டுநர்களுக்கும், அதே ஊதிய விகிதத்தினை வழங்கலாம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளார்.

3) மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது :-

- சென்னை மாநகராட்சி நீங்கலாக மற்ற மாநகராட்சிகளில் பணிபுரியும் ஓட்டுநர் பணியிடம் பொதுப் பணியிடமாக (Common Category) கருதப்படுவதால் அப்பணியிடங்களில் 10/20 ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்கு தேர்வு நிலை/சிறப்பு நிலை நிர்ணயம் மற்ற அரசு துறைகளில் உள்ள ஓட்டுநர்களை போல அரசாணை (நிலை) எண்.162, நிதித் துறை நாள் 13.4.98 – Schedule–IIல் தெரிவிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதங்களான முறையே ரூ.4000-100-6000/-, ரூ.4300-100-6000/– என்ற முந்தைய ஊதிய விகிதங்களில் (Pre revised scale) நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

- திருத்திய ஊதிய விகிதங்கள் 2009-ன்படி, தேர்வு நிலை/சிறப்பு நிலைகளுக்கு என்று தனி ஊதிய விகிதங்கள் இல்லை. தேர்வு நிலை/சிறப்பு நிலைகள் எய்தும்போது ஒரு ஊதிய உயர்வு அடிப்படை ஊதியத்தில் (ஊதியம் + தர ஊதியம்) 3 சதவிகிதம் மட்டுமே அனுமதிக்கப்படும். எனவே, இவ்வாணையின் அடிப்படையில், தணிக்கை தடையை கைவிட மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4) இவ்வரசாணை 10.6.2011–ஆம் நாளிட்ட நிதித் துறையின் அ.சா.எண்.29656/(P.C)/2011-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கருத்தையா பாண்டியன்
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர்,
சென்னை – 5.
ஆணையாளர்,
மதுரை,கோயம்புத்தூர்,சேலம்,திருநெல்வேலி,
திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, வேலூார், ஈரோடு
மற்றும் திருப்பூர் மாநகராட்சி,

நகல் :

நிதி (ஊதிய பிரிவு) துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
செயலர் அவர்களின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை – 9
தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்,
203, அழகேசன் சாலை, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர்–641011
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (இணையதளம்) துறை,
சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்